Judicial Form No.53

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, UTHANGARAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | CC.No.238/2025 | | |
| Witness for Complainant | PW3- Chief and Cross | | |
| Name | மோகன் | Taluk : | ஊத்தங்கரை |
| Father's / Husband Name | | Calling : | |
| Village | | Age : | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 25.03.2026.

துவக்க நேரம்- 5.20 PM

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

நான் தற்போது சாமல்பட்டி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கூடுதல் பொறுப்பாக ஊத்தங்கரை காவல் நிலைய உதவி ஆய்வாளராகவும் இருந்து வருகிறேன். நான் கடந்த 16.02.2025 ஆம் தேதி ஊத்தங்கரை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்தபோது ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று ஊத்தங்கரை அரசு மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த தருமன் என்பவர் வந்து வாக்குமூலம் பதிவு செய்தேன். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் காவல்நிலையம் வந்து குற்ற எண் 78/2025 சட்டப்பிரிவுகள் 296பி, 118(1), 115(2) BNS ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்டுகிறது).** வழக்கின் சம்பவ இடத்திற்கு 16.02.2025 ம் தேதி 1.00 மணிக்கு சாட்சிகள் சாலா, மகேஷ்வரி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடம் சென்று பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். **(பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.5, 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** தருமன், செல்வி, நாகலட்சுமி, காளியப்பன், மகேஷ்வரி, சாலா ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கில் காயமடைந்த தருமன் என்பவருக்கு சிகிச்சை அளித்த

மருத்துவர் விஜயராஜ் என்பவரை விசாரித்து விபத்து பதிவேடுகள் மற்றும் காயச் சான்றிதழ்கள் ஆகியவை பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(விபத்து பதிவேடுகள் மற்றும் காயச் சான்றிதழ்கள் முறையே அ.சா.ஆ.7, 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் இவ்வழக்கின் எதிரிகளை கைது செய்ய தேடியபோது 1ம் எதிரி தருமனை 17.02.2025 ம் தேதி காலை 10.00 மணிக்கு எதிரியின் வீட்டின் முன்பாக இவ்வழக்கின் 1ம் எதிரி தருமனை கைது செய்து நீதிமன்ற வழிகாட்டுல் பின்பற்றி தக்க முறையுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கின் எதிரிக்கு பிரிவு 41 அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது. பின்னர் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

இவ்வழக்கில் புகார்தாரரிடம் இருந்து வெற்றுபேப்பரில் கையொப்பம் மட்டும் பெற்று புகார்தாரர் சொல்லாத சங்கதிகளை போலிசாரே நிரப்பி கொண்டு எதிரி மீது பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் சம்பவயிடம் செல்லாமல் பார்வை மகஜர், வரைபடம் ஆகியவை காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எதிரி கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

முடிவு நேரம்– 5.40 PM

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

D SARAVANAN Digitally signed by D SARAVANAN

Judicial Magistrate
Uthangarai.